விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | வைகாசி 9 | ரம்ழா 1 | இதழ் 101
யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 22 5–1985

## குருநகரில் துப்பாக்கிச்சூடு: ஒருவர்பலி மற்றொருவர்காயம்

(யாழ்ப்பாணம்)

குருநகரில் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பலியானதாகவும் ஏழுபிள்ளைகளின் தந்தை படுகாயமுற்றதாகவும் தெரிகின்றது.

ஒரு வீட்டைச் சேர்ந்த பெண்கள் உட்பட அப்பகுதியில் உள்ள பலர் விசாரணைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல் குருநகர்ப் பகுதியில் இடம்பெற்ற இத் திடீர்ச் சம்பவத்தால் பெரும் பதற்றநிலை ஏற்பட்டது.

குண்டுவெடிச் சத்தமும் அதனைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் அப்பகுதியில் கேட்ட வண்ணமிருந்தன.

துப்பாக்கிச் சூட்டில் கந்தையா முத்தையா (32வயது) என்பவரே படுகாயமடைந்தவராவார். பூநகரி வேரவிலையை சேர்ந்த இவர் கச்சேரிப்பகுதியில் வசிப்பதாகவும் சின்னக்கடையில் உள்ள லோண்டரிக்கு கரிகொண்டு போய்க் கொடுத்துவிட்டு அங்கிருக்கும் பொழுது துப்பாக்கிச் சூடுபட்டதாகவும் தெரிவித்தார்.

(மா)

# இருதரப்பிலும் நடைபெறும் மனிதக் கொலைகளை உடன்நிறுத்துக!

## 3 முக்கியஎதிர்க்கட்சிகள் கூட்டாக வேண்டுகோள்

(கொழும்பு)

இருதரப்பிலும் இடம் பெற்றுவரும் படுகொலைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென்று நேற்று மூன்று முக்கிய எதிர்க்கட்சிகள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. கே. பி. எஸ். சில்வா, சமசமாஜக் கட்சியின் சார்பில் திரு பேர்னுர்ட் சொய்ஸா, சிறிலங்கா சுதந்திர மக்கள் கட்சியின் சார்பில் திரு. விஜே குமாரணதுங்சா ஆகியோர் இக் கூட்டறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர்.

பெரும்பான்மையான பொதுமக்கள் மனிதக்கொலைகள் இருதரப்பிலும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்றே விரும்புகிறுர்கள். இந்த விருப்பத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டு செயல்படவேண்டும் என்று அவ்வறிக்கை கூறியது.

இன்று ஜனாதிபதி கூட்டியிருக்கும், சமயத்தலைவர்கள் கூட்டத்திலும் இந்த விடயத்துக்கு உடனடி முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருமலையில் பஸ் கடத்தல்

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் நேற்று பஸ் ஒன்று கடத்தப்பட்டது. இதையடுத்து கடைகள் யாவும் பூட்டப்பட்டு நகர் வெறிச்சோடியது.

## பிரிவினையை முறியடிக்க 8 அம்சத் திட்டம்

### பத்திரிகையாளரிடம் லலித் தகவல்

(கொழும்பு)

"பிரிவினை கோரும் திட்டத்தை முறியடிக்க அரசாங்கம் எட்டு அம்சத் திட்டமொன்றைத்தயாரித்துள்ளது. பிரிவினைக் கோரிக்கைக்கு முற்றுப்புள்ளிவைப்பதே இத்திட்டத்தின் முழுநோக்கமாகும்."

நேற்று செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

[6-ம் பக்கம் பார்க்க]

நேற்று நடைபெற்ற—

## அடையாள உண்ணுவிரதம் பூரண வெற்றி!

(அலுவலக நிருபர்)

தமிழ்ப்பகுதிகளிலும் இலங்கையின் வேறு சில பகுதிகளிலும் இடம்பெற்றுவரும் அட்டூழியங்களைக் கண்டித்து யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று நடத்திய அடையாள உண்ணுவிரதப் போராட்டத்துக்கு குடாநாடு முழுவதும் உள்ள சகல தரப்பினரும் தங்கள் முழுமையான ஆதரவை வழங்கியுள்ளதாக, மாணவர் பிரதிநிதி ஒருவர் திருப்தி

(6-ம் பக்கம் பார்க்க)

நெதர்லாந்திலிருந்து—

## 3 ஆயிரம் இலங்கைத் தமிழர் திரும்பி வருவர்

(ஹேக்)

நெதர்லாந்தில் தற்பொழுது அடைக்கலம் கோரி தங்கியுள்ள சுமார் மூவாயிரம் இலங்கைத் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படவிருக்கின்றனர்.

இவர்களின் வருங்காலம் பற்றி முடிவு செய்வதற்காக அண்மையில் இலங்கை வந்

(6ம் பக்கம் பார்க்க)

## ★ குருநகர் தொடர்மாடி வீடுகள்—

## விண்ணப்பித்த அனைவர்க்கும் இன்று நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

"குருநகர் தொடர்மாடி வீடுகளைப் பெறுவதற்காக விண்ணப்பம் செய்தவர்களில் இதுவரை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுத சகல விண்ணப்பதாரிகளும் இன்று புதன்கிழமை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் ஏற்கனவே அறிவித்தபடி வியாழன், வெள்ளி, சனிக்கிழமை

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்கள் தம்மைத் தாமே பாதுகாக்கவேண்டும்

– தொண்டா

(கொழும்பு)

இன்றைய நிலையில் தமிழ் மக்கள் வேறு எவரையும் எதிர்பார்க்காமல் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்று கிராமிய தொழில் துறை அமைச்சர் திரு.எஸ்.தொண்டமான் கூறினர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் இரத்தம் பற்றுக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் இரத்தம் பற்றுக்குறையாக இருப்பதாக இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

(6ம் பக்கம் பார்க்க)

## ஏறுவூர் கண்ணிவெடியில் 5 கொமாண்டோக்கள் பலி

((கொழும்பு)

நேற்று முன்தினம் ஏறுவூரில் (கிரான்) இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் 5 பொலிஸ் கொமாண்டோக்கள் பலியாகியுள்ளனர்.

7 பேர்வரை காயமுற்றதாகக் கருதப்படுகின்றது.

இச்சம்பவத்தையடுத்து பொலிஸ் கொமாண்டோக்கள் தீவிரமாகப் போராடிய

[6ம் பக்கம் பார்க்க]

## அகதிகள் தாக்கப்பட்டனர்

(வவனியா)

அனுராதபுரத்திலிருந்து வாகனங்களில் அழைத்துவரப்பட்ட தமிழ் அகதிகள் வவனியா, கண்டிவீதியில் இறக்கப்பட்டு அடித்துத் துரத்தப்பட்டனராம்.

பாதுகாப்பாக ஏற்றி வந்தவர்களே இதனைச் செய்தார்கள் எனக்கூறப்படுகின்றது.

## அனுராதபுரம் சம்பவம்: கூட்டணி அதிர்ச்சி, கவலை

[சென்னை]

அநுராதபுரத்தில் சிங்களப் பொதுமக்கள் கொலை செய்யப்பட்டது குறித்து, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆழ்ந்த கவலையும், அதிர்ச்சியும் தெரிவித்துள்ளது. அக் கட்சியின் அரசியல் குழுவின் சார்பில் திரு. எம். சிவசிதம்பரம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்படி சம்பவத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறியுள்ளார்.

தாக்குதல்களுக்குள்ளான தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கு அரசும், அரசு சார்பற்ற இயக்கங்களும் விரைந்து

[6ம் பக்கம் பார்க்க]

## காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கிளையில்—

## கொள்ளையடித்தவர்கள் குண்டும் வைத்தனராம்

(யாழ்ப்பாணம்)

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளை அலுவலகத்திலிருந்து நேற்றுமுன் தினமிரவு இரும்புப்பெட்டியைக் கொள்ளை அடித்தவர்கள், அங்கு வெடிகுண்டொன்றையும் வைத்துவிட்டுச்சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை கடமையாற்றுவதற்காக அங்குசென்ற உத்தியோகத்தர்கள், குண்டு வைக்கப்பட்டிருந்ததை அறிந்து, சில மணிநேரம் அலுவலகத்துக்கு வெளியில் நின்றுவிட்டுப் பின்னர் வீடு திரும்பினர்.

[6ம் பக்கம் பார்க்க]

# அரி ஜளம்பரம்

## விற்பனைக்கு

நீரழிவு வியாதிகளுக்கு உகந்த ''கோதுமை அரிசி'' மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். M G M. and Stores, 777, காங்கேசன்துறை வீதி and 208, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611. (2820)

சித்தங்கேணிச் சந்திக்குக் கிட்ட பிரதான வீதியில் குடியிருப்பதற்கோ, வியாபாரத்துக்கோ உகந்த 13 நிலப்பரப்பு முழுமையாகவோ, இரண்டு துண்டுகளாகவோ விற்பனைக்குண்டு. Rockwood and Co. 8/1, அம்மன் ரோட், கந்தர் மடம், யாழ்ப்பாணம். 3358

வட்டுக்கோட்டை ஞானசம்பந்தர் வீதியில் நல்ல தண்ணீர் உள்ள 2 நிலப்பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- பெ. சிவபாலன், சட்டத்தரணி, சித்தங்கேணி, T. கந்தசாமி. ஞானசம்பந்தர் வீதி, வட்டுக்கோட்டை. 3357

வீட்டு உபகரணங்களாகிய நல்ல ரக டெக்செற் (Braun), Sanyo Three in one செற். Singer தையல் மெஷின், Blender, புதிய ரக றேடியோ மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் திரு. பொ செல்வராசா, 120, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 3360

மிக நல்ல நிலையில் உள்ள ELF 250 40 Sri Double Wheel Long Body உடன் விற்பனைக்குண்டு. அல்லது நல்ல நிலையில் உள்ள Tractor க்கு மாற்றவும் முடியும். மேலும் விபரங்களுக்கு க. செ. சுவர்ணராஜ், மகாத்மாவீதி, நெல்லியடி, கரவெட்டி. 3347

Tractor உதிரிப்பாக Sales Man உடன் தேவை. தங்கும் வசதியும் செய்து கொடுக்கப்படும். முழுவிபரங்களுடன் எதிர்பார்க்கும் சம்பளத்துடன் க. செ. சுவர்ணராஜ் நெல்லியடி, கரவெட்டி என்ற விலாசத்திற்கு எழுதவும். 3348

ஊரெழு பிள்ளையார் கோவிலுக்கு சமீபத்தில் மின்சாரத்துடன் வீடும், ஐந்து பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். சட்டத்தரணி இராசரத்தினம், ஊரெழு கிழக்கு, சுன்னாகம். 3368

## விற்பனைக்கு

நவக்கிரி மார்க்கண்டு சாஸ்திரியார் வீட்டுக்கருகில் உள்ள 27½ பரப்புக் காணியும், வரளாயில் 15 பரப்பு பனைக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: எஸ். ஞானச்சந்திரன், ஆசிரியர், ஈவினை, புன்னாலைக்கட்டுவன். 3372

நல்லஇன அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டியது. ச நல்லநாதன், 11/1, ஓடைலேன். வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். 3375

## ஏல விற்பனவு

மானிப்பாய் 'வசந்தம்' வே. க. இராசலிங்கம் அன்சன் அவர்களிடம் 1-1-1980 தொடக்கம் 30-4-1984 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 18-6 1985 செவ்வாய்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் அதே அடைவு கடையில் வைத்து ஏலத்தில் விற்கப்படும்.

கே. இராஜகோபால்
ஏல விற்பனையாளர்.
வண்ணார்பண்ணை. 3379

## தேவை

இறைச்சிக்குரிய கோழிகள் தேவை தொடர்பு கொள்ள வேண்டியஇடம்: அண்ணபாம், இணுவில். கிளை: அண்ணபாம், செம்மாதெரு, (மொஸ்கலேன்) யாழ்ப்பாணம். 3376

## தவறிவிட்டது

இல: 387761446 V பத்மாவதி தம்பையா, பத்தைமேனி, அச்சுவேலி என்பவருடைய அடையாள அட்டையுடன் வேறு சில தஸ்தாவேஜுகளும் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மேல்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 3377

புத்தக லேபலிஸ் வெள்ளை நிறத்தில் சிவப்புக் கோடிட்ட முட்டை வடிவான சிறிய லேபல் பார்சல் ஒன்று மினி பஸ்ஸில் வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரிக்குக் கொண்டு செல்லும் பொழுது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் அல்லது எமது அச்சகத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: சிறீ விக்னேஸ்வரா அச்சகம், 150, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 3373

## அம்பிகாவதி பான்ஸி கூட்ஸ்

### 66, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

1985-05-09ம் திகதிய ஈழநாடு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 628/2ம் இலக்கத்தைச் சேர்ந்த சின்னையா முத்துக்குமாரு கனகசபாபதி என்பவரின் அறிவித்தல் தொடர்பாக காலஞ்சென்ற சின்னையா முத்துக்குமாரு என்பவரின் கனிஷ்ட புத்திரனும், யாழ்ப்பாணம் பெரிய கடை, 66-ம் இலக்க கடைக் கட்டிடத்தில் ''அம்பிகாபதி பான்ஸி கூட்ஸ்'' (AMBIHAPATHY FANCY GOODS) என்னும் வியாபாரத்தை ஏக உரிமையாளராக (SOLE PROPRIETOR) நடாத்தி வருபவருமாகிய நான் இத்தால் சகலருக்கும் தெரிவிப்பதாவது, காலஞ்சென்ற சின்னையா முத்துக்குமாரு என்பவர் நடாத்தி வந்த ''அம்பிகாபதி ரெக்ஸ்ரைல்ஸ்'' என்னும் வியாபாரம் 1984-05-31ம் திகதியுடன் மூடப்பட்டுவிட்டதென்பதாகும்.

குறித்த சின்னையா முத்துக்குமாரு கனகசபாபதி என்பவர் காலஞ்சென்ற சின்னையா முத்துக்குமாரு என்பவரின் மரணசாதன நிறைவேற்றுனராக நான் அறிந்த வரையில் எந்த ஒரு நீதிமன்றினாலும் இன்று வரை நியமிக்கப்படவில்லை. அத்துடன் சின்னையா முத்துக்குமாரு என்பவர் நீதிமன்றில் அதிகாரம் பெற்று நிர்வகிக்கக்கூடிய சொத்துக்கள் எதனையும் விட்டுவிட்டு மரணமடையவில்லை.

சின்னையா முத்துக்குமாரு
கிருபானந்தவாரி

3380

## மேர்ச்சன்ட் பினன்ஸ் லிமிட்டெட்

### விசேட மாற்றத்தக்க வைப்புப் பணச் சான்றிதழ் காணுமற்போனமை

கீழ்க் குறிக்கப்பட்டிருக்கும் வைப்புப் பணக்காரர், அவர் பெயருக்கெதிரே குறித்திருக்கும் விசேட மாற்றத்தக்க வைப்புப் பணச் சான்றிதழ் தவறுதலாக வைக்கப்பட்டோ அல்லது அழிக்கப்பட்டோ, காணுமற்போன காரணமாக மேற்குறிக்கப்பட்ட கம்பனியின் முகாமைத்துவ இயக்குனருக்கு, இதன்பிரதி தரும்படி விண்ணப்பித்திருக்கின்றார்.

ஆகவே இப் பிரசுரத்தின் திகதியிலிருந்து இரண்டு கிழமைக்குள், குறிக்கப்பட்ட சான்றிதழின் பிரதி கொடுப்பதற்கு, ஏதாவது உரிமை அல்லது தடை கோரப்படாவிடின், நான் இதன் மூலப்பிரதி ரத்துச் செய்யப்பட்டதாகக் கருதி, இச் சான்றிதழின் பிரதி வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுப்பேனென, இத்தால் அறிவிக்கின்றேன்.

பெயரும் — விலாசமும்

திருமதி ஜெயதேவி ஜெயச்சந்திரன்
''அன்னை இல்லம்'', நவிண்டில் ரோட்,
பொலிகண்டி.

சான்றிதழ் இலக்கம்
F D 01113

அ. சோமசுந்தரம்பிள்ளை,
முகாமைத்துவ இயக்குநர்,
மேர்ச்சன்ட் பினன்ஸ் லிமிட்டெட்.

## பெருமளவு பால் தேக்கம் கொள்வனவு நிறுத்தம்

(வவனியா)

பொலநறுவையிலிருந்து பால் பவுஸர் வவனியா வராததினால் பெருமளவு பால் வீணாகியது.

அநுராதபுரத்தில் இடம் பெற்ற அசம்பாவிதத்தின் பின் பவுஸர் பால் கொள்வனவு செய்ய வவனியா வராததினால் பால் சபையில் தொட்டிகளில் பால் தேங்கிக் கிடக்கிறது.

பால் கொள்வனவும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

## HOME FINANCE LTD

### ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்

பூகொடை ஆலையில் தயாரித்த நவீன ரக

**சீத்தை – பப்ளின் – பிசாமா**

போன்ற பலரக துணிவகைகள் எங்களிடம் மொத்த விற்பனைக்கு உண்டு. சகாய விலை. விரும்பியோர் உடனே வந்து பார்வையிட்டு தெரிவு செய்யவும்.

NO: 82, KANNATHIDDY ROAD, JAFFNA

## லண்டன், பேர்லின்

### செல்வோருக்கு

உங்கள் பிரயாண ஒழுங்குகளுக்கும்,
விமானச் சீட்டுக்களுக்கும்
எம்முடன் உடனே தொடர்பு கொள்க.

யாழ்—கொழும்பு பஸ் சேவை சீரடைந்தவுடன் உங்கள் பயணத்தை மேற்கொள்ளத்தக்கதாக சகல ஆயத்தங்களும் செய்து தரப்படும்.

## MACK TRAVELS LTD.

இல. 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24791

## ஓராண்டு நினைவஞ்சலி

### அமரர் மா. பாலசுந்தரம்

(முன்னாள் சுன்னாகம் பாலன்ஸ் ஸ்ரோா உரிமையாளர்)

தோற்றம்:
29-11-1945

மறைவு:
02-06-1984

திதி:
22-05-1985



எம் கண்ணில் நீர் வடிந்தால் உம் நெஞ்சில்
உதிரம் கொட்டிடுமே
ஆலம் விழுதுகள் போல் உறவு ஆயிரம்
இருந்து மென்ன
வேரென நீயிருந்தால் நாம் அதில்
வீழ்திடாதிருப்போம்

எங்கள் குடும்ப ஒளிவிளக்காயிருந்து எங்களுக்கெல்லாம் ஊன்றுகோலாயிருந்து வழி நடத்திய அன்புத் தெய்வமே, எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சைவிட்டு ஒருபோதும் அகலா. உங்கள் ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர் அஞ்சலி

உமது பிரிவால் வாடும்
மனைவி: சிவரஞ்சிதமலர்,
மழலைகள்: மயூறம், மயூரதா.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

3359

## மணிவாக்கு

காமம், குரோதம், மதம், மாச்சரியம் முதலிய விரோதிகள் ஒருவனின் உட்பகைவர்கள். இவைகளை வென்றவன் உலகையே வென்றவன் ஆகின்றான்.

— புத்தர்.

# நமதுநோக்கு

## சிரிப்புக்கும் சிந்தனைக்கும் உரிய சிதறல்கள்

துன்பத்தைப் பார்த்துச் சிரிக்க முடியுமானால், மெய்யறிவு பிறக்க வழி உண்டு. இன்று தோல்வியாகத் தென்படுவது நாளை வரும் வெற்றிக்கு வித்தாகும்.

சூறாவளியானது பயங்கரவாதத்தைப் போல் மக்களை செடி கொடிகளை நிலைகுலையச் செய்து விடுகிறது. கொந்தளிப்பில் அழிந்தும், காயப்பட்டவை போன்றும் ஆகிவிடுகின்றன.

பின்பு அமைதி நிலவும் போது அவை யாவும் சிகிச்சை பெறும் சாந்ததில் அமைந்திருக்கின்றன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களும், யாழ் பிரஜைகள் இணைப்புக் குழுவும் இன்றைய நிலைமையைக் கண்டித்து அதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் துயரத்தை ஒரு சோதனையாகக்கணித்து அதில் வெற்றிகாண உண்ணாவிரதம் போன்ற உத்திகளுக்கும் மக்கள் ஒத்துழைப்பைக் கோருவது ஒரு சிறந்த செயலாகும்.

நாம் ஒரு சமூகம், ஒரு நாட்டு மக்கள் என்றபொது உணர்வு வளர்ச்சியடைவதற்கு இன்றைய இன்னல்கள் நன்றாய் உதவ வேண்டும்.

அதற்கு அப்பாலும், முற்றாக வேறு படாததுமான கருத்தையே நாம் விளக்க முயல்கின்றோம்.

அது என்ன? உண்ணாவிரதம் போன்ற சத்திய பரிசோதனை உபாயங்கள் நாடெங்கும் பரவவேண்டியிருக்கிறது.

ராணுவத்தீர்வை முன்வைத்த அரசு இன்று ராணுவதீர்வையும் அரசியல் தீர்வையும் ஒரு சோடியாகப் பிணைத்திருக்கிறது.

நாம் இங்கு அரசு என்னும் போது பாதுகாப்பு அமைச்சரை குறிப்பாகக் கருதுகிறோம்.

உங்களுக்கும் மனநோய் பீடித்திருக்கா என்று வாசகர்கள் கேட்கலாம்; பாதுகாப்பு அமைச்சர் இது போன்று எத்தனை தமாசுகளை விட்டிருக்கிறார் என்ற கருத்தில் அக்கேள்வி எழலாம்.

இல்லை. ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் உள்ளக் கிடக்கையை ஒலிபரப்பும் கருவிகளில் முக்கியமானவர் பாதுகாப்பு அமைச்சர். இருவரும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் பயங்கரவாத முறியடிப்பு வெற்றிபெறாததால் அவர்களைக் கண்டிப்பது தர்மமாகாது.

எவருக்கும் சிறப்பாக ஆட்சித் தலைவர்களுக்கு சந்தேகப் போரில் இறங்குவது மகிழ்ச்சியளிக்கும் விடயமல்ல. அரசியல் தீர்வுக்கு இவ்விருவரும் இயன்றளவு முயற்சித்ததை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

அந்த முயற்சிகள் தலையெடுக்கும் கட்டங்கள் ஒவ்வொன்றிலும் அவற்றிற்கு சவுக்கடிபோல் நிகழ்ந்தவை தமிழ்ப் போராளிகளின் எதிர்பாராத தாக்குதல்கள்.

இந்தியாவுடன் ராஜதந்திர உறவுகளைச் சீர்ப்படுத்தி, இந்தியா ''தமிழ் இளைஞர் பயங்கரவாதத்தை'' தடுத்து நிறுத்த, இலங்கை ஒரு நியாயமான அரசியல் தீர்வு காணும் என்ற நம்பிக்கை வளர்ந்து வந்தது ஒரு முக்கிய கட்டம்.

பிரிட்டிஷ் பிரதமரின் இலங்கை விஜயம் இதனை உறுதிப்படுத்துமென்று எம்மிற் பலர் எண்ணியது உண்மை. ஆனால் நடந்தது என்ன?

விக்ரோறியா நீர்த்தேக்கத் திறப்பு விழாவை தொலைக்காட்சியில் பார்த்தவர்கள் ஜனாதிபதி ஆயத்தப்படுத்திய வீரப்பேச்சு, எவ்வித வீரமுமின்றி வெற்றுப் பேச்சாய் சிதறியதை அறிவார்கள்.

காரணம் பிரதமர் தாட்சரின் வரவை ஒட்டி நடந்த வாட்டர்லூ (Waterloo) போன்ற யாழ்ப்பாண பொலிஸ் நிலையத் தாக்குதல்.

பிரதமர் தாட்சரின் கூலிப் படையும், மொசாட் போன்ற வெளியூர் ராணுவ உதவியும் பயிற்சியும் இன்றைய அழிவுக்கு ஈடாகுமா?

எனவே பயங்கரவாத ஒழிப்பு காலமெடுக்கும் என்ற தாளத்தை மட்டுமல்ல ராகத்தையே மாற்ற வேண்டியிருக்கிறது.

வெற்றியில் நம்பிக்கை கொண்ட காலத்தில் 'ஆனந்த பைரவி' என்ற ராகத்திலும் ஆதி தாளத்திலும் கச்சேரி நடந்திருந்ததால் இன்று நிரந்தர முகாரியும் வேதாளமுமாகி விட்டது.

அனுராதபுரத்துக்குப் பின் தென் இலங்கையில், அதன் பிரதான நகரங்களில் மக்களுக்கென்ன பாதுகாப்பு? என்ற கேள்வி எழுந்திருக்கிறது. ''உண்டு'' என்கிறார் லலித். ''ஆனால் இப்பொழுது வெளியிடமுடியாது.'' பாவம் சிங்கள மக்களுக்கு வடமராட்சி போன்ற அட்டூழியங்கள் தெரியாது.

இன்று தமிழர்கள் தம் பகுதியில் ராணுவத்தைக் கண்டு எவ்வாறு அஞ்சுகின்றனரோ அவ்வாறு சிங்கள மக்கள் இன்னொருவிதமான அச்சத்துக்கு உள்ளாகின்றனர். நாட்டின் பாதுகாப்பு பாகுபாட்டுக்குள்ளானதால் பிரிவினை தானாகவே தோன்றிவிட்டது.

இதற்கொரு மருந்து ஜனாதிபதி சொல்லியிருக்கின்றார். ''பாகிஸ்தான், சீனா, பிரிட்டன் உதவும் நவீன ஆயுதம்''.

''ஐயா'' என்று சொல்லிச் சிரித்து ''இந்த ஆயுதக் குறைபாட்டாலா இதுகாறும் வெற்றி தடைபட்டது?'' என்றொரு கேள்வி 'வல்லவன் கையில் புல்லும் ஆயுதம்' என்பது இன்றைய நவீன போர் முறையிலும் உண்மையானது.

இன்னொருஅபாயம்எதிரிகள் கையில் இவை அகப்பட்டால்?-பரிகாசமல்ல, நிச்சயம் சிந்திக்கவேண்டியது.

இன்றைய போரில் ஈடுபட்டிருக்கும் இரு பகுதியினரும் நாட்டின் சொத்திலே, நாட்டின் செலவிலே போரி நடத்துகின்றனர்.

இதன் விளைவு: இந்தநாட்டில் எப்பகுதியிலும், எந்நேரமும், எதுவும் நடக்கலாமென்ற நடுக்கம் அதிகரித்திருக்கிறது

கலவாணா எம். பி. சொல்லியதுபோல அரசியல் தீர்வு அவசரமானது. தாமதம் அபாயமானது.

விடுகதையால் விடுதலை கோரும் மக்களை விடுதலை பேணும் மக்களை வெருட்டிவிடமுடியாது.

# தீவிரவாதத் தலைவர்களுடன் பேச்சு நடத்த மகாசங்கம் விருப்பம்

(கொழும்பு) - இந்தியாவில் அல்லது வேறு ஒரு நாட்டில் தீவிரவாத இயக்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று பௌத்த மகாசங்க உயர்சபை செயலாளர் வண. கலாநிதி பெல்லன்வல விமலானந்ததேரோ தெரிவித்தார்.

தென்னிந்தியாவில் இயங்கி வரும் தீவிரவாத இயக்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதுபற்றி மதத் தலைமைப்பீட உயர் குழு ஒன்று ஆராய்ந்து வருகிறது.

ஐக்கிய சமய நிறுவனத்தினர் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளது. (ஈ)

# ஊர்காவல் படையில் 1,30,000 பேர்!

## 8,750 பேருக்கு உடனடிப் பயிற்சி

(கொழும்பு)

ஊர்காவல் படையில் 1,30 000 பேர் சேர்ந்துள்ளார்கள். இவர்களில் 8,750 பேருக்கு உடனடியாக ஆயுதப்பயிற்சியளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கேகாலை, சிலாபம், பெல்மதுளை ஆகிய 3 முகாம்களில் வைத்து இவர்களுக்கு ஆயுதப்பயிற்சியளிக்கப்படவிருக்கிறது.

இன்றைய நிலைமையை எதிர் நோக்கும் முகமாக பொதுசன பாதுகாப்பை முன்னிட்டு, இவர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்படவிருக்கிறது. (க)

# நெதர்லாந்தில் தமிழர் நிலை

(என். எம். சண்முகநாதன்)

நெதர்லாந்தில் தற்சமயம் 3,500 தொடக்கம் 4000 வரையிலான தமிழ் இளைஞர்கள் தங்கியியுள்ளனர். அங்குள்ள அரசாங்கம் சுமார் நாற்பது கட்டிடங்களை (விடுதிகள்) தேடி, அக் கட்டிடங்கள் ஒவ்வொன்றிலும் சுமார் நூறு இளைஞர்களைஅமர்த்த எண்ணியுள்ளது. தற்சமயம் அங்கே ஆன்கெம், அபெல்டூன், கஸ்ரெல், லொசெம்பார்ச்செம் எனும் நான்கு விடுதிகளைத் தெரிவு செய்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 8ம் திகதி அபெல்டூன் எனும் விடுதியில் 100 இளைஞர்கள் வரை வந்து சேர்ந்துள்ளதாகவும் இவர்களிற்குச் சில கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

முதலில் இவ் இளைஞர்கள் நெதர்லாந்து அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்தவர்கள் போல் இருந்தனர். ஏனெனில் அவ் அரசாங்கம் இவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புமோ என்று அஞ்சினார்கள். இக் காரணத்தினாலேயே அவ் இளைஞர்கள் அவ் விடுதியில் முதலில் தங்கத் தயங்கினர்.

''நெதர்லாந்தில் உள்ள தமிழ் இளைஞர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து அம்ஸ்ரடாமில் உள்ள ஒரு தேவாலத்திற்குச் சென்றனர். அங்கு அவர்கள் தமக்கு ஏற்பட்டுள்ள நிலைமைகளைப் பற்றிக் கலந்துரையாடவும் மேற்படி விடுதிகளில் ஒன்றான ''அபெல்டூனில்'' எந்தச் சூழ் நிலைகளின் மத்தியில் தாம் வாழ வேண்டும் என்பன பற்றிய பூரணவிபரங்களை அறிந்து கொள்ளவுமே இவ் இளைஞர்கள் அங்கு சென்றனர்'' என்று அங்குள்ள சமூக சேவை ஸ்தாபனமொன்று அன்மையில் வெளியிட்ட தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அன்றிரவு இளைஞர்கள் அத்தேவாலயத்திலேயே தங்கியதாகவும் அடுத்தநாள் சுமார் 125 இளைஞர்கள் குறிப்பிட்ட ஒரு விடுதிக்குச் சென்றதாகவும் தெரிகின்றது.

தமிழர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படவிருப்பதாக அங்குள்ள அரசு அறிவித்தது என்றும் இதன் நிமிர்த்தம் சிலர் முன்னறிவிப்பு இன்றியே 3 தடவைகள் அம்ஸ்ரடாம் விடுதிகள்ல் இருந்து வெளியேற்றப்பட்டனரென்றும் கட்டடம் திருத்தப்படவுள்ளது என்று பல பொய்களைச்சொல்லி அங்கிருந்த இளைஞர்கள் எல்லோரையும் வெளியில் அனுப்பினார்கள் என்றும் இவர்களை பொலிசார் நாட்டின் வேறு பல பகுதிகளில் உள்ள கட்டடங்களுக்கு கொண்டுசென்று தங்க வைத்தார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கு வாரமொன்றிற்கு 20 கில்டர்ஸ் [1 கில்டர்=7 ரூபா] பணம் கைச்செலவுக்காக வழங்கப்பட்டது.

பலருக்கு இப்பணம் இலங்கையில் உள்ள தமது உறவினர்களுக்கு கடிதம் எழுதவே உதவுகின்றதாம்!

தற்போது சகல தமிழ் இளைஞர்களும் தம்மை ''ரெவனகா'' [பாதிக்கப்பட்டவர்கள்] பதிவுசெய்து கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. இதுவரையில் 600 இளைஞர்கள் பதிந்துள்ளனர். மேற்கு ஜேர்மனியின் எல்லைக்கு அண்மையிலே இவர்களைத் தங்க வைத்துள்ளதாகவும் மே. ஜெர்மனியில் இருந்து நெதர்லாந்து எல்லைக்கு வருபவர்கள் புகலிடம் கோராத பொழுது சுலபமாக திருப்பி அனுப்பி வைக்கப்படுவதாகவும் தெரியவருகின்றது.

# பிரிட்டன் வரும் இலங்கைத் தமிழர்

## உள்துறை அமைச்சர் விளக்கம்

[லண்டன்]

இலங்கையில் இடம்பெறும் வன்செயல்களுக்குப் பயந்து பிரிட்டன் வரும் தமிழர்களும், பிரிட்டனில் அகதிகளாக தங்கியிருந்து இலங்கைக்குத் திரும்பிச் செல்லமறுக்கும் தமிழர்கள் பற்றியும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பது பற்றி நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உள்துறை அமைச்சரினால் விளக்கம் கொடுக்கப்பட்டது.

இது தொடர்பாக பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்துப் பேசிய பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் திரு. லியோன் பிரிட்டன்; பிரிட்டனில் தங்கியிருக்கும் அல்லது பிரிட்டனுக்கு வரும் ஒவ்வொரு இலங்கைத் தமிழர்களின் விண்ணப்பங்களும் அவரவரர்களின் தனிபபட்ட தன்மைகளின் அடிப்படையில் விசாரிக்கப்படுகின்றன. விசாரணையில் அவர்கள் தாம் இலங்கைக்கு மீண்டும் சென்றால் அங்கு பலபார தூரமான இன்னல்களுக்கு உடபடுவார்கள் என்பதனை நிரூபிக்காத அனைத்து தமிழர்களும் ஒருவருட காலத்தின் பின் திருப்பிஅனுப்பப்படுவார்கள்என்று தெரிவித்தார்.

# பாகிஸ்தானில் சதிபுரட்சி: வழக்கு விசாரணை

(இஸ்லாமபாத்]

பாகிஸ்தானில் கடந்த வருடம் தற்போதய ஆட்சிக்கு எதிராக சதிப்புரட்சி ஒன்றில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட 17 பேர் மீதான விசாரணை பாகிஸ்தானில் மிக அந்தரங்கமான முறையில் நடைபெற்று வருகிறது.

இக்குற்றச் சாட்டில் 13 இராணுவ மேஜர்களும் ஒரு லெப்டினட் ஜெனரலும், இரண்டு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும், பாகிஸ்தானின் பிரபல வழக்கறிஞர் ஒருவரும் சம்பந்தப் பட்டிருந்தனர்.

இவர்கள் மீதான விசாரணை மிகவும் அந்தரங்கமான முறையில் நடைபெறுகிறது இவர்கள் 17 பேரும் மிகக கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டு அவர்களிடம் வாக்கு மூலங்கள் பெறப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

# லெபனானில் தொடர்ச்சியான சண்டை!

# 122 பேர் பலி! 530 பேர் படுகாயம்!

## பாலஸ்தீன—ஷியாஸ், முஸ்லிம்—கிறிஸ்தவ குழுக்களிடையே மோதல்கள்!!

பெய்ரூட், மே. 21

**லெபனான் தலைநகர் பெய்ரூட்டிலும், பெய்ரூட் பகுதியைப் பிரிக்கும் எல்லைப் பகுதிகளிலும் நேற்றுப் பல்வேறு பிரிவினரிடையே நடைபெற்ற சண்டையில் 122 பேர் கொல்லப்பட்டனர்! 530 பேர் படுகாயமடைந்தனர்!**

பெய்ரூட்டில் பாலஸ்தீன அகதிகள் முகாம்கள் அமைந்திருக்கும் பகுதிகளைச் சுற்றி பாலஸ்தீனியர்களுக்கும், ஷியாஸ் முஸ்லிம் குழுக்களுக்குமிடையே நடந்த பலத்த சண்டையில் 62 பேர் கொல்லப்பட்டனர். 270 பேர் படுகாயமடைந்தனர்.

மறுபுறம் பெய்ரூட்டைப் பிரிக்கும் 'கிறீன்லைன்' எல்லைக் கோட்டுக்கருகேமுஸ்லிம் கிறிஸ்தவ படைகளுக்கிடையேஇடம் பெற்ற சண்டைகளில் மொத்தம் 60 பேர் பலியானதாகவும், 260 பேர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

பெய்ரூட் நகரைப் பெருமளவு பாதித்த இரு மோதல்களினாலும் பெய்ரூட் நகரம் நேற்று முழுவதும் அமைதி இழந்து ஒரே யுத்தமயமாகக் தொடர்ந்து நடைபெறுவதாக காட்சியளித்தது. சண்டைகள் வும் கூறப்படுகிறது.

## ரகுமான்கான் விடுதலை

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக நடைபெறும் வன்செயல்களுக்கு மத்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்று கோரி ஆர்ப்பாட்டம் நடத்தியபோது கைது செய்யப்பட்ட தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர் ஜனாப் ரகுமான்கான் மற்றும் 120 தி மு. க. தொண்டர்களும் நேற்று முன் தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

## 353 அகதிகள் வவனியா வந்தனர்!

[வவனியா]

அநுராதபுரததில் இடம் பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து கடந்த சில தினங்களாக 353 தமிழ் அகதிகள் வவனியாவுக்கு வந்துள்ளனர்.

இவர்களில் 43 பேர் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் வவனியா சுத்தானந்த இந்து இளைஞர் கட்டடத்திலும், ஓமந்தை அகதிகள் முகாமிலும் தங்கியுள்ளனர்.

## சரத் கூறுகிறார்: "சாதாரண மக்கள் பலியாவதை தடுக்க வேண்டும்"

(கலவானை)

"சாதாரண மக்களின் உயிர் பலியாக்கப்படுவதை தடுத்து நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கலவான எம் பி திரு சரத் முத்தேட்டுவேகம கோரியுள்ளார்.

கலவானையில் இடம் பெற்ற வைபவமொன்றைத் தொடர்ந்து பேசிய திரு சரத் முத்தேட்டுவேகம நாட்டில் இன்று நிலவும் நெருக்கடிக்கும் இனப்பிரச்னைக்கும் சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் பரிகாரம் காணப்படல் வேண்டும் என்றும் குறிக்கோளை அடைவதற்கு சகல எதிர்க்கட்சிகளும் நல்ல மனதுடன் ஒத்துழைக்க வேண்டும்என்றும் அவர் தெரிவித்தார் (ரா)

# வன்முறைக்கு எதிராக இந்தியாவில் புதுச்சட்டம்!

(புதுடில்லி)

இந்தியாவில் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தவும், பிரிவினைக் கோரிக்கையை ஒடுக்குவதற்குமான சட்ட மூலம் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

சட்ட அமைச்சர் திரு அசோக் சென்னினால் கொண்டுவரப்பட்ட இச்சட்டமூலம், ஜனதாக் கட்சி உறுப்பினர் பேராசிரியர் மது தண்டவதே கொண்டுவந்த இரு திருத்தங்களையும் ஏற்றுக்கொண்டுநிறைவேற்றப்பட்டது.

இச்சட்டத்தின்படி இந்தியாவில் பிரிவினைக் கோரிக்கைக்கு ஆதரவாக ஒருவர் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ நடவடிக்கைகளை மேற்கொள்ளல், இந்தியாவின் அரசியல் தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள், அப்பாவிப் பொதுமக்கள் ஆகியோரை வன்முறை மூலம் கொலைசெய்தல் ஆகியன பயங்கரவாதக் குற்றங்களாகக் கருதப்படுகின்றன.

இக்குற்றங்களுக்கு மரண தண்டனையும், சிறிய குற்றங்களுக்கு 5 வருடம் முதல் ஆயுட் காலச் சிறையும் வழங்கப்படும்.

குற்றவாளிகளை விரைவில் விசாரிப்பதற்காக விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு அவை மூலம் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு தண்டனைகள் வழங்கப்படும்.

முன்னதாக இச்சட்டமூலம் குறித்துப் பேசிய அ. தி. மு. க. லோக்சபா தலைவர் திரு. குழந்தைவேலு, "மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் வேண்டி நிற்கிறவேளையில் இச்சட்டமூலம் மாநில அரசுகளின் அதிகாரங்களை மேலும் குறைக்கப்படுகிறது" என்றார்.

ஆயினும் இது விடயத்தில் மாநில அரசுகளுடன் கலந்து மாநில அரசுகளின் தீர்மானங்களை மத்திய அரசு ஏற்றுக் கொள்வது என்ற அம்சமும் சட்டமூலத்தில் சேர்க்கப்பட்டது.

இச்சட்டம் ஆசிரியர் இயக்கங்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படமாட்டாது என்று சட்ட அமைச்சர் உறுதியளித்தார்.

## யாழ்நகரில் பலியானவர்களில் ஒருவர் மனநோயாளி!

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் நேற்றுமுன் தினம் நடந்த துப்பாக்கிச் சூட்டில் மனநோயாளி ஒருவரும் பலியானார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த சொலமன் நவரத்தினத்தின் [23 வயது] மரண விசாரணையில் மேற்கண்ட தகவல்தெரியவந்தது.

யாழ். மரண விசாரணை அதிகாரி க. கேசவன் மரண விசாரணை நடத்தினார்.

உறவினர் எஸ் சீவரத்தினம் சாட்சியமளிக்கையில்; இறந்தவர் ஒரு மனநோயாளி என்றும், ஒரு மாதத்தின்முன் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற பின்னர் வந்து தாயாருடன் தங்கியிருந்ததாகவும், சம்பவதினம் காலை 11 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டவர் பிற்பகல் நான்கு மணி வரை திரும்பி வரவில்லையென்றும், இதனால், தாயார் தேடிப்பார்த்துவர நடராசா என்பவரை யாழ் நகருக்கு அனுப்பியதாகவும், யாழ். ஆஸ்பத்திரியில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் இறந்துகிடப்பதாக அறிந்து மறுநாள் காலை அடையாளம் காட்டியதாகவும் கூறினார்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு, விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (க)

## கி. மு. சங்கத்தை ரத்துச் செய்யக் கோரிக்கை

(மாவிட்டபுரம்)

மயிலிட்டிகரைப்பகுதிக்கான கிராம முன்னேற்றச் சங்கம் முறையற்ற விதத்தில் அமைக்கப்பட்டுள்ளதால் அதனை ரத்துச் செய்து பொதுக்கூட்டமொன்றை நடத்தி கிராம முன்னேற்றச் சங்கத்தை அமைக்குமாறு மயிலிட்டிப்பகுதியைச்சேர்ந்த பல பொதுஜன சேவா சங்கங்கள் வலி வடக்கு உதவி அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளன.

மயிலிட்டி பெரியநாட்டான் தேவன்துறை கடற்றொழில் விரிவாக்க சேவைச்சங்கம், மயிலிட்டி கெனடி சனசமூக நிலையம், பெரிய நாட்டுத்தேவன் துறை மேற்கு கடற்றொழில் விரிவாக்க சேவைச் சங்கம், திருப்பூர் ஒன்றிய கடற்றொழில் விரிவாக்க சேவைச் சங்கம், திருப்பூர் ஒன்றிய அண்ணா அறிவகம் ஆகியன மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளன.

மயிலிட்டி கரைப்பகுதிக்கான கிராம முன்னேற்றச்சங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக பத்திரிகையில்செய்தி வெளிவந்தபோதும் அவ்வாறான கூட்டமொன்று நடைபெற்றதாகவோ, கிராம முன்னேற்றச் சங்கம் அமைப்பட்டதாகவோ பொதுமக்களுக்குத் தெரியவரவில்லை. ஆகவேமுறையற்றவிதத்தில்அமைக்கப்பட்ட கிராம முன்னேற்றக்சங்கத்தை ரத்துச் செய்து புதிதாக ஒரு பொதுக் கூட்டத்தை நடத்தி கிராமமுன்னேற்றச் சங்கதனை அமைக்கவேண்டும்" என மேற்படி கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வலி. வடக்கு கிராம அபிவிருத்தி அதிகாரியின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது.

## சம்பளம் தாமதமாகும்

(மானிப்பாய்)

யாழ்ப்பாணம் பெரியதபாற் கந்தோர் பாதுகாப்பின்மை காரணமாக இயங்காமலிருப்பதால் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ள பல காரியாலயங்களுக்கான சம்பள காசோலைகள் உரிய காரியாலயங்களுக்கு செல்வதில் தாமதமேற்படலாமென அறியப்படுகிறது

தற்போது யாழ்ப்பாணத்தில் நிலவிவரும் சூழ்நிலைகாரணமாக தாமதித்தே சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளும் நிலைமையிலுள்ளவர்கள் இது காரணமாக மேலும் தாமதித்தே சம்பளத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியதொரு இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## விஞ்ஞான இளைஞர் ஆண்டு

[உடுவில்]

"இளைஞர் ஆண்டை முன்னிட்டு அகில இலங்கையிலும் உள்ள பாடசாலைகளில் விஞ்ஞான இளைஞர் ஆண்டு எதிர்வரும் செப்டெம்பர் 23ம் திகதி முதல் 29ம் திகதிவரை கொண்டாடப்படவுள்ளது.

விஞ்ஞான கணித பொருட்காட்சியை நடாத்துதல், விஞ்ஞான கணித புதிர் போட்டியை நடத்துதல், விஞ்ஞான செயற்திட்டம் அமைத்தல் ஆகிய மூன்று நிலைகளில் இவை செயல்படுத்தப்படும்" என்று மானிப்பாய் கல்விவட்டார பாடசாலை அதிபர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய விஞ்ஞான கணித கல்வி அதிகாரி திரு. நடராசா தெரிவித்தார்.

மானிப்பாய் வட்டார கல்வி அதிகாரி திரு. செ. தனஞ்செயன் தலைமையில் பாடசாலை அதிபர்கள் பிரிவுத் தலைவர்கள் அடங்கிய கூட்டம் அண்மையில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விஞ்ஞான கணித கல்வி அதிகாரி நடராசா தமது உரையில் மேலும் கூறியதாவது:

"விஞ்ஞான கணித பாடங்களை பொறுத்தளவில் இக் கல்வி வட்டாரத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவவில்லை. ஆசிரியர்கள் தொடர்ந்தும் பழைய முறைகளில் புத்தகப் படிப்போடு நிற்காது மாணவர்களை கூடியளவு சிந்திக்கவும் செயல்படவும் செய்யும் புதிய முறைகளை கையாளவேண்டும். கணிதபாடத்தில் கற்பித்தல் உபகரணங்கள் பயன்படுத்தப்படவேண்டும். தமிழ் விழாக்கள், சமய விழாக்கள் கொண்டாடுவது போன்று பாடசாலைகளில் விஞ்ஞான மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டு விஞ்ஞான தின விழாக்களும் கொண்டாடப்படவேண்டும். இதன்மூலம் மாணவர்களின் அறிவு அனுபவரீதியாக பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்" என்றார்.

வர்த்தக பாட கல்வி அதிகாரி திரு. சிவராசா சிறப்புரையாற்றினார்.

கல்வித்திணைக்களத்தால் ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு வாங்கப்பட்ட பெறுமதிமிக்க விஞ்ஞான-கணித உபகரணப் பொருட்கள் பலவற்றை விஞ்ஞான வட்டார அதிகாரி திரு நடராசா பாடசாலை அதிபர்களிடம் கையளித்தார்.

## நியமனம்

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி அரசினர் வைத்திய சாலையின் பொறுப்பதிகாரியாக மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிய டாக்டர் (திருமதி) எஸ். இரத்தினசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

## நிரந்தர பரிசோதகர் நியமிக்க கோரிக்கை

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்புச் சுகாதார பரிசோதகராகக் கடமையாற்றிய திரு கே. மாணிக்கவாசகர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளதால் அவரது கடமைகளை வட்டுக்கோட்டை சுகாதார பரிசோதகர் திரு. எம். கருணானந்தன் கவனித்து வருகின்றார். பண்டத்தரிப்புப் பகுதிக்கு நிரந்தரமான சுகாதார பரிசோதகர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று இப்பகுதிப் பொதுநல இயக்கங்கள் சுகாதாரத் திணைக்களத்திடம் கோரிக்கைவிடுத்துள்ளன.

# மணிவிழாக் காணும் நகுலேஸ்வரக் குருக்கள்

கீரிமலை நகுலேஸ்வரம் ஆதீனகர்த்தாவும், பிரதம சிவாச்சாரியரும், கீரிமலை, சிவநெறிக்கழகத் தலைவருமாகிய சிவசிறீ கு. நகுலேஸ்வரக்குருக்களுக்கு இம்மாதம் 25-ம் திகதி கீரிமலை சிவநெறிக்கழகம் மணிவிழா எடுக்கின்றது.

சிவாச்சாரியார் அவர்கள் அறுபது ஆண்டுகள் மங்கலமாக வாழ்ந்து சேவை செய்தமையைப் பாராட்டியும், அவர் பின்பும் மங்களகரமாக வாழ்ந்து சேவை செய்யத் தெய்வ ஆசியை வேண்டியும் இம்மணிவிழா அவர்களுக்கு எடுக்கப்படுகின்றது.

நகுலேஸ்வரம் ஈழவளநாட்டிலே வரலாற்று முக்கியம் வாய்ந்ததும், மூர்த்தி தல தீர்த்த விசேடம் உடையதும், ஈழத்துப் பஞ்ச ஈசுவரங்களுள் ஒன்ருய் விளங்குவதும், புராண பாரம் பரியங்களைக் கொண்டதுமாய் விளங்குகின்றது.


சிவசிறீ நகுலேஸ்வரக்குருக்கள் அவர்கள் வேதாகம விற்பன்னரும், கிரியாபூஷணமுமாகிய தமது தந்தையார் சிவாச்சாரியார் குமாரசாமிக்குருக்களிடம் வேதாகமங்களைப் பயின்று கிரியைகளிலும் சிறப்புற்றவராய் முதன்மைச்சிவாச்சாரியராகத் திகழுகின்ருர்கள். தந்தையார் இவரது இளம் வயதிலே காலமானதால் நகுலேஸ்வர ஆதீனப் பொறுப்பு இவரைச் சார்ந்தது. இவரும் தம்முன்னேர் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆலயத்தின் உயர்வு வேண்டிப் பல்வேறு துறைகளிலும் உழைத்து வருகின்ருர்கள். தம்மாலியன்ற திருப்பணிகளைத் தம்பொருள் கொண்டும் உபகாரிகள் பொருள் கொண்டும் இயற்றி வருகின்ருர்கள். இவர் மேற்கொண்ட திருப்பணிகளில் தற்போது நிறைவுருதிருப்பவை வசந்த மண்டபமும், இராஜ கோபுரமுமாகும். இவ்விரு திருப்பணிகளையும் நிறைவேற்றி வைக்க நகுலேசுவரர் பெருமான் திருவருள் கூட்ட வேண்டுமென்று சதாநினைத்துக் கொண்டிருப்பார். நித்திய நைமித்தியங்கள் செவ்வனே நடைபெறுமாறு கண்ணும் கருத்துமாகவிருப்பார்.

நகுலேசுவரக் குருக்கள் அவர்கள் எப்போதும் ஆசாரசீலராய், புன்முறுவல் பூத்த முகத்தோடு இன்சொற் பேசுபவராய், சிவாச்சாரிய இலக்கணங்கள் நிறையப் பெற்றவராய், எங்கள் கிராமத்தில் நன்கு மதிப்பைப் பெற்ற சற்குருவாய் விளங்குகின்ருர்கள். நோய்முதலாங் குறைகள் நீங்கும்படி தம் மனக் குறைகளை அவர்பால் முறையிட்டு மந்திரவிபூதி, மந்திர நூல் இரட்சை பக்தி சிரத்தையோடு பெற்று அணிந்து மனக்குறை நீங்கி நிறைவு பெற்ருேர் பலர்.

குருக்கள் அவர்கள், கீரிமலை சிவநெறிக்கழக ஆரம்பகாலந் தொடக்கம் தலைவராகவிருந்து கழகத்தை வழிநடத்தும் சிவாச்சாரியரா; விளங்குகின்ருர்கள். அவர்களுக்கு மணிவிழா வெடுத்து அவர்கள் சேவையைப் பாராட்டாமலிருக்க முடியாது.

—வி. சங்கரப்பிள்ளை

## நன்மனம் படைத்தவர்



நன்மனம் படைத்தவராக வும் நேர்மையும் தர்மசிந்தனையும் கொண்டு வாழ்ந்த அமரர் இளையப்பா தர்மலிங்கம் மறைந்து மாதமொன்ருகிறது.

இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா பொறியியலாளரான இவர், முன்னைநாள் பிறப்பு-இறப்பு விவாகப் பதிவாளர் காலஞ்சென்ற அ. இளையப்பாவினதும் விசாலாட்சிப்பிள்ளையினதும் புதல்வராவார்.

அமரர் தர்மலிங்கம் சைவநெறிக் கோட்பாடுகளில் தீவிர ஈடுபாடு உடையவர். எடுத்த கருமத்தை எப்பாடு பட்டேனும் செய்து முடிக்கும் ஆற்றல் நிறைந்தவர் இன்று தமிழ்ப்பேசும் இளைஞர்கள் படும் அவலநிலை கண்டு இரத்தக்கண்ணீர் வடித்தவர்.

உயிருடன் இருக்கும் காலத்திலேயே தன் உயிரற்ற உடலை எதிர்கால மாணவ சமுதாயத்திற்காக யாழ். பல்கலைக்கழக வைத்தியபீடத்திற்கு வழங்க வேண்டுமென்று உயில் எழுதி வைத்தவர் அவ்வண்ணமே அவர் இறந்ததும் சமயக்கிரியைகள்முடிவடைந்ததும் அவரது உடல் யாழ் பல்கலைக்கழக வைத்தியபீடமாணவர்களிடம் அன்னரின் குடும்பத்வர்களால் வழங்கப்பட்டது. அன்னரின் ஆன்மா சாந்தியடைக!

இ எழிற்செல்வன்

## இன்றைய பலன்

வைகாசி: 9 (22-5-1985)
புதன்கிழமை
திதி: துதியை காலை 6-00ன் மேல் திருதியை
நஷத்திரம்: மிருகசீரிடம் பிற்பகல்வரை

மேடம்: சகோதரத்தால் உதவியுமுண்டு. முயற்சிக்கும் விடயம் ஒன்றில் முன்னேற்றம் உண்டு லாபகரமான விடயத்தைப் பின்போடவும்.

இடபம்: ஆத்திரப்படுவதால் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். எவ்விடயத்திலும் அவசரம் கூடாவாம்.

மிதுனம்: எதற்கெடுத்தாலும் சீறிவிழுவீர்கள். குடும்பத்திலும் சச்சரவுக்கு இடமுண்டு. உடல்நலத்தைப் பேணவும்.

கடகம்: எதிர்பார்த்த வேதனம் தடைப்படலாம். எடுத்த காரியம் தக்கதருணத்தில் கைகூடும். பேச்சில நிதானம் வேண்டும்.

சிங்கம்: சரீர சுகத்துடன் குடும்பவழிச் சுகமும் உண்டு சகோதர ஐக்கியம் பெருகும் திடீர் பிரயாணம் ஏற்படும்

கன்னி: மாணவர்களாயின் கல்வியில் விடா முயற்சி வேண்டும். தாய்வழியால் தனவரவுக்கும் இடமுண்டு. வாகன நலனும் உண்டு.

துலாம்: நூதன ரோகத்திற்கும் இடமுண்டு. உடல்நிலையில் கவனம் வேண்டும் எதிர்பாராத வரவும் உண்டு.

விருச்சிகம்: வாழ்வில் ஒளி வீசும். களஸ்திரவழியால் வரவிற்கு இடமுண்டு கன்னிகள் அவதானம் வேண்டும்.

தனுசு: குடும்பவழிச் சுகம் உண்டு குழந்தையொன்றின் உடல்நலம் குன்றும். கவனம் வேண்டும்.

மகரம்: எக்காரியம் மேற்கொள்வதானினும் நம்பிநடக்கக் கூடாவாம இயந்திரங்களுடன் பழகுபவர்கள் கவனம் வேண்டும

கும்பம்; தந்தைவழி ஆதரவும் சருமசிந்தையும் மேலோங்கும். சக்கசயத்தில் பெரியவர் ஒருவருடைய உபதேசம் கிடைக்கும்.

மீனம்: தொழில் தனில் சிறப்பு உண்டு சகதொழிலாளர் மத்தியில் கருத்துமோதலுக்கு இடமுண்டு சிந்தித்து செயல்படவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## றம்ழான் சிந்தனை

றம்ழான் மாதம் ஒவ்வொரு இரவிலும் நோன்பு நோற்பதாக மனதார நிய்யத்துவைக்கவேண்டும். றம்ழான் மாதம் முழுவதும் நோன்பு வைப்பதற்காக றம்ழான் மாத முதலிலேயே நிய்யத்து அன்றைய ஒரு நோன்பிற்குத்தான் அந்த நிய்யத்துப் போதியதாகும். ஆனலும் அம்மாதிரி நிய்யத்து வைப்பது ஸுன்னத்து. ஏனெனில் ஞாபகமின்றியோ தவறுதலாகவோ நோன்பு வைப்பதாக ஓரிரவில் நிய்யத்துச் செய்யாவிடில் வேறு ''மதுஹபு''களின்படி மாதத் தொடக்கத்தில் வைத்த நிய்யத்தைக்கொண்டு நோன்பிருக்கலாம். பர்ளான நோன்பாயிருப்பின் சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி அந்த றம்ழானின் ''அதா''வான நோன்பு என்று அல்லது களாவென்று அல்லது நேர்ச்சையென்று அல்லது குற்றப் பரிகார நோன்பென்றும் குறிப்பிடவேண்டும் அதுவும் சூரிய அஸ்தமனத்திற்குப்பிறகு அது முதல் கிழக்கு வெளுப்பதற்குள்ளாக நிய்யத்துச்செய்ய வேண்டும். மனதில் நிய்யத்து வைப்பதுதான் பர்ளு ஆனல் வாயால் சொல்லிக்கொள்வது விரும்பத்தக்கது

—நபிநாயகம் (ஸல்)

நோன்பு திறக்கும் நேரம்: 6-21
நோன்பு ஆரம்பிக்கும்நேரங்: 4-8

-ஜனுபா ஜெஸீமா கௌத்

## சேவை நலன் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் கடந்த 22 ஆண்டுகளாக ஆசிரியையாக கடமையாற்றியும் இவ்வித்தியாலயத்தில் உப அதிபராகவும் கடமையாற்றி பதவியிலிருந்து இளைப்பாறுஞ் செல்வி மங்கையர்கரசி முத்துவுக்கு அண்மையில் பாராட்டு விழா நடைபெற்றது.

ஆசிரியர் நலன்புரிச் சங்க ஆதரவில் இடம் பெற்ற இப் பாரட்டு விழாவில் அதன் தலைவர் திருமதி யோ. இராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் திரு வி. மாலிங்கம் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் பலரும் ஆசிரியயையின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

## தமிழ் மக்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஹோட்டல் தப்ரபேனில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திரு. தொண்டமான் உரைநிகழ்த்தினர்.

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் வாழ்க்கை பற்றிய இந்நூலை திரு அந்தனி ஜீவா எழுதியுள்ளார்.

திருமதி காந்தியின் வாழ்வில் மூன்று முக்கிய அம்சங்களை நாம பின்பற்றலாம் என்று கூறிய அமைச்சர் தோல்வியைக் கண்டு சோர்வுருமல் முன்னேறுவது திருமதி இந்திரா காந்தியின் முக்கிய குணங்களில் ஒன்று. தனது பாதுகாப்புக்கென அவர் அதிகம் அக்கறை காட்டிக்கொள்ளவில்லை பாதுகாவலர்களே அவரைக்கொலை செய்தார்கள். எனவே பாதுகாப்புக்காக வேறு யாரையும் எதிர்பாராமல் நமைநாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பது புரிகிறது என்ருர். இந்திராவின் மன உறுதியையும் அமைச்சர் வியந்து கூறினர்


## மருத்துவ அதிகாரி தேவை

1983ல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிர்மாணிக்கப்படடு வரும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வன்னேரிக்குள ஜெயபுர குடியேற்றத்திட்டத்தில் தங்கியிருந்து சேவை செய்ய ஒய்வு பெற்ற R. M. P. தரத்திற்குட்பட்ட மருத்துவ அதிகாரி தேவை.

இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

எதிர்பார்க்கும் வேதனத்துடன் நற்சான்று பத்திரங்களுடன் 31-5-85ற்கு முன் விண்ணப்பிக்க.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

மாவட்ட இணைப்பாளர்,
சர்வோதயம்,
வவுனியா.

3339



ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-00
கமலஹாசன் - ஜெயபிரதா மஞ்சுபார்கவி
சலங்கை ஒலி
(ஈஸ்ட்மன் கலர்)
1984ம் ஆண்டின் மிகச்சிறந்த படம்

லிடோ சினிமா
சுதாகர் - ராதிகா நடித்த
ஆயிரம் வாசல் இதயம்
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2.30
பாக்கியராஜ் - சரிதா நடித்த
மௌன கீதங்கள்
(ஈஸ்மன் கலர்)
புதிய கொப்பி

ஹரன் சினிமா
தினசரி 10-30 — 2-30
250 நாட்களுக்குமேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்
மோகன் - பூர்ணிமா
விதி
(கலர்)

ஆனந்தி
வீடியோ சினிமா
[மனோகராவில்]
தினசரி 10-30, 2-30
ரஜனி, கமல், ஜெயசித்திரா நடித்த
இளமை ஊஞ்சலாடுகின்றது
(கலர்)

மொடேர்ண்
மினி சினிமா
(ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமையில்)
BLACK EMMANUEL
பிளாக் எம்மானுவல்
(குறிப்பிட்ட சிலதினங்களுக்கு மட்டும்)
கருத்தோட்டமுள்ள விறுவிறுப்பான காட்சிகளுடன், புத்தம் புதிய படப்பிரதியில் தெளிவாகக் காண்பிக்கப்படுகின்றது,
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

வின்ஸர்
தினசரி 10-30, 2-00 4-15
Roger moore Ian Henry in
VENDETTA FOR THE SAINT
ஜேம்ஸ் பொண்ட் சித்திரம்

யாழ். வின்ஸர் மினி
தினசரி 10-30, 2-30
கார்த்திக் அம்பிகா (இருவேடம்)
மேஜர் சுந்தரராஜன் ராதாரவி. S. S. சந்திரன் S. V. சேகர், வனிதா நடித்த
பேய் வீடு
பயங்கரக் காட்சிகள் கொண்டது.

லதா மினி
(கோண்டாவில்)
காலை 10-30 மாலை 3-30
ராஜீவ் — மேனகா
கடிவாளம்

ஸ்ரான்லி மினி
(சினிமா)
10-30, 2-15, 4-15
ரஜனி, அம்பிகா, ராதா நடித்த
''எங்கேயோ கேட்ட குரல்''
5'X5' திரையில்

S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
மு. ப 10-30 பி ப 2-00
M. G. R., K. R. விஜயா
தாழம்பூ

4-30 P. M.
I Spit on Your Grave
(கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு மட்டும்)

# யாழ். கோட்டைப் பகுதியில் [redacted]

# காரியாலயசெயல்பாடுகளுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும்

## தம்மைசந்தித்தகுழுவுக்கு பிரிகேடியர்உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டையைச்சுற்றியுள்ள அரசாங்க காரியாலய தபால்நிலைய நீதி மன்ற ஊழியர்களுக்கும், கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் வசிங்கா நேற்று உறுதியளித்தார்.

யாழ் கோட்டைப் பகுதியிலுள்ள அரசாங்க காரியாலயங்கள், நீதிமன்றம், கல்லூரியைச்சேர்ந்த குழு ஒன்று யாழ் கோட்டை முகாமில் பிரிகேடியரை சந்தித்தபோதே இந்த உறுதியை அளித்தார். இச்சந்திப்பின்போது காப்டன் கொத்தலாவலையும் சமுகமளித்திருந்தார்

யாழ். மேல் நீதிமன்ற பதிவாளர் திரு வி சி பரமநாதன், யாழ். மாவட்ட நீதிமன்ற பதிவாளர் திரு. கே. குலசிங்கம், சிறுவர் பராமரிப்பு உத்தியோகத்தர் திரு. வி. தர்மபாலன், யாழ் நீதிமன்ற முதலியார் திரு பாலசுந்தரம். உள்நாட்டு இறைவரித் திணைக்கள பிரதி ஆணையாளர் திரு. கதிர்காமர், சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். சண்முகலிங்கம், உதவி கூட்டுறவு ஆணையாளர் திரு. கே. வேலாயுதபிள்ளை, யாழ். தபால் நிலைய அதிபர் திரு. ஞானப்பிரகாசம், உதவி தொழில் ஆணையாளர் திரு. என் சி. இராசநாயகம்,யாழ். மத்திய கலலூரி அதிபர் திரு. பாலசுந்தரம், காணிப்பதிவாளர் திரு. எஸ். அன்னலிங்கம் ஆகியோர் இக்குழுவில் சென்றிருந்தனர்.

கோட்டையைச் சுற்றியுள்ள பகுதிகளில் அடிக்கடி துப்பாக்கிப்பிரயோகம் நடைபெறுவதால் ஊழியருக்கும் மாணவருக்கும் பாதுகாப்பு இல்லை என்றும், இதனால் அவர்கள் அச்சமடைந்துள்ளதாகவும், போக்குவரத்து செய்யமுடியாமல் இருப்பதாகவும் குழுவினர் தெரிவித்தனர்.

ஒரு வாரத்துக்குள் இப்படி எதுவும் நடக்காமல் பார்த்துக்கொள்வதாக பிரிகேடியர் குழுவினரிடம் உறுதியளித்தார்.

பொதுசன நூலகத்தை சுற்றியுள்ள பகுதியில் போக்குவரத்து பாதையில் ஒரு மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டது.

### மாணவர்களுக்குப் பாதுகாப்பு

யாழ். மத்திய கல்லூரிக்கு மாணவர்கள் வரும்போது பாதுகாப்பு தேவை என்று கல்லூரி அதிபர் தெரிவித்தபோது காலையில் கல்லூரிக்கு வரும்போதும் பின் நண்பகல் வீடுதிரும்பும் போதும் சுமார் ஒரு மணிநேரம் அப்பகுதியில் ஆயுதப்படையினரின் ரோந்து நடவடிக்கை தவிர்க்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

காணிக் கந்தோர் உறுதிகளுக்கு பாதுகாப்பளிப்பது பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டபோது, அரசாங்க அதிபரின் சிபார்சின்பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டது.

கோட்டையைச் சுற்றியுள்ள காரியாலயங்களில் பணியாற்றுபவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுமென்றும், அவர்கள் வேறு இடங்களுக்குச் செல்லவேண்டியதில்லை என்றும், பிரிகேடியர் குழுவினரிடம் தெரிவித்தார். எவரையும் வேறிடங்களுக்குச் செல்லுமாறு தான் பணிக்கவில்லை என்றும் இனிமேல் இப்படியான அசம்பாவிதங்கள் நடைபெறாமல் பார்த்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார் (க)

---

# பாடசாலை பிரச்னைகள்: இன்று அதிபர்கள் ஆலோசனை

[யாழ்ப்பாணம்]

இன்றைய சூழ்நிலையில் பாடசாலைகள் நடாத்துவதில் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் குறித்து வடமாகாண அதிபர்கள்சங்கம் இன்று கூடி ஆலோசனை நடாத்தவுள்ளது.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று காலை 9-மணியளவில் இவ்வாலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது

வடமாகாண அதிபர்கள்சங்க உறுப்பினர்களை இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர் திரு கே அருணசலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாடசாலைகள் நடாத்துவதில் ஏற்படும் கஷ்டங்கள் பாதுகாப்பு ஆகியன பற்றியும், அதற்கு என்ன நடவடிக்கை எடுப்பதென்பது குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசித்து தீர்மானிக்கப்படும் என்று தலைவர் தெரிவித்தார். (மா)

---

## குருநகர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் நேர்முகப்பரீட்சை நடைபெறுது ''

இன்று நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும். சமுகமளிக்காதவர்களுக்கு மீண்டும் பரீட்சை நடைபெறுது''.

நேர்முகப் பரீட்சைக் குழுத் தலைவரான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை யாழ், மாவட்ட முகாமையாளரான திரு ரி. பி முருகையா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைக் குழுவில். யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம், யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு மாணிக்கவாசகர் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

இந்த வீடுகளை பெறுவதற்கு 850பேர் விண்ணப்பித்துள்ளனர் கடந்த 2 தினங்களாக 200பேருக்கு நேர்முக பரீட்சை நடைபெற்றது. இன்று மிகுதியாகவுள்ள 650பேருக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும்

விண்ணப்பம் செய்து இதுவரை நேர்முக பரீட்சைக்கு தோற்றுதவர்கள் இன்று காலை 8மணி முதல் மாலை 4-30மணிக்கிடையில், யாழ் தேசிய வீடமைப்பு இலாகாவிற்கு சென்று நேர்முக பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

இன்று மாலை 5மணிக்கு வீடு பெற்றவர்கள் பட்டியலில் பூர்த்தி செய்யப்பட்டு நாளை வீடுகள் கையளிக்கப்படும் என்று தெரிகிறது. (க)

---

## காப்புறுதி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை அச்குண்டு மீட்கப்பட்டதாகத் தகவல் இல்லை.

கொள்ளை அடிக்கப்பட்ட இரும்புப்பெட்டி கல்லுண்டாய் வெளியில் உள்ள குளத்தில் நேற்றுக்காலை காணப்படுவதாகக் கிடைத்த தகவலின் பேரில் அலுவலக உத்தியோகத்தர்கள் அங்கு சென்று பார்த்தபோது முக்கியமான பைல்களும், காசோலைகள், குழந்தைகள் சேமிப்பு புத்தகங்கள் மாத்திரம் நீரில் நனைந்தபடி கிடந்ததாகவும். இரும்ப்புப்பெட்டி அங்கு காணப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

கொள்ளை அடிக்கப்பட்ட இரும்புப் பெட்டிக்குள் சிறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்கென ரூ 500, ரூ 1000 வரை இருந்திருக்கவேண்டுமென்று கருதுவதாக ஓர் உத்தியோகத்தர் சொன்னர்.

அலுவலகக் கதவுகள் நேற்று முழுநாளும் மூடப்பட்ட நிலையில் இருந்தன. (மா)

---

## அனுராதபுர...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

செயல்பட்டு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ள திரு. சிவசிதம்பரம் அநுராதபுரச் சம்பவத்தையடுத்துப் பல தமிழ்மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் நெடுந்தீவுச் சம்பவத்தில் ஏராளமான தமிழர்கள் பலர் இறந்துள்ளார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில்நடக்கும் இனப்படுகொலையை நிறுத்த உலக நாடுகள் உடனடியாகக் கவனம் செலுத்தவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

---

## ஏருவூர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் தப்பியோடிய தீவிரவாதிகள் மத்தியிலும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கலாம் என அரசாங்க அறிக்கை கூறியது.

---

## யாழ். ஆஸ்பத்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இப்பொழுது 25 பைந்து இரத்தம் மாத்திரம் இரத்த வங்கியில் இருப்பதாக தெரிவித்த அவ்வதிகாரி, மேலதிகமாக இரத்தம் தேவைப்படுவதாகச் சொன்னர்.

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் இரத்தம் தேவைப்படுவதாகவும்,இரத்த தானம் வழங்குவோர் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு வந்து இரத்த தானம் செய்யும்படியும் அவ்வதிகாரி வேண்டுகோள் விடுத்தார். (மா)

---

# ஜனதிபதியுடன் தொண்டா ஆலோசனை

[கொழும்பு]

இன்றைய நாட்டின் நிலைமை குறித்தும் தமிழர் பிரச்னை குறித்தும் நேற்று கிராமிய தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமானும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. எஸ் செல்லச்சாமியும் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் பேச்சு நடத்தினர்கள். பேச்சுக்கள் இன்று மீண்டும் ஆரம்பமாகுமென்று தெரியவருகின்றது.

---

## நேற்று நடை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவித்துள்ளார்.

நேற்று பரவலாக பாடசாலைகளிலும் ஆலயங்களிலும மாணவர்களும், பொதுமக்களும் உண்ணவிரதம் அனுஷ்டித்தனர்.

அரச, கூட்டுத்தாபன, தனியார்துறை அலுவலகங்களில் வேலைகள் முற்றுக ஸ்தம்பிதமடைந்தன.

பாடசாலைகளில் மாணவ-மாணவிகள் நடாத்திய உண்ணவிரதத்தில் ஆசிரியர்கள், ஆசிரியைகள். கன்னியாஸ்திரிகள், கத்தோலிக்க மதகுருமார்கள், இந்து குருமார்கள் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

சகலரும் கறுப்புப்பட்டி அணிந்து பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர்.

பல இடங்களிலும் சந்திகளிலும் வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

போக்குவரத்துச் சேவைகள் முழுமையாக நடைபெற்ற போதிலும் கடைகள், வர்த்தக நிலையங்கள் உணவுச்சாலைகள் முற்றுமுழுதாக நாள் முழுவதும் மூடப்பட்டிருந்தன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்கனவே அறிவித்திருந்ததுபோல் அத்தியாவசிய சேவைகளான ஆஸ்பத்திரிகள், போக்குவரத்துச் சாதனங்கள் மாத்திரம் இயங்கிக்கொண்டிருந்தன.

பிரஜைகள் குழு, அன்னையர் முன்னணி, பாதிக்கப்பட்ட ஊழியர்சங்கம், வடபிரதேச தொழிற்சங்கக் கூட்டுக்குழு கிராமமுன்னேற்றச் சங்கங்கள் போன்ற பொதுநல ஸ்தாபனங்கள், இக்கண்டன உண்ணவிரதத்துக்கு ஆதரவளித்துள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற உண்ணவிரதத்தில், சகல பீட மாணவர்களும் விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர். மருத்துவபீட மாணவர்களுடன் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணர்களும் கலந்து உண்ணவிரதம் இருந்தனர்.

அன்னையர் முன்னணி நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் முன்றலில் உண்ணவிரதம் அனுஷ்டித்தனர். பிரார்த்தனை செய்தனர். [மா]

---

# கட்டிடங்கள் தகர்ப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாயிலுள்ள திறந்த வெளிச் சிறைச்சாலைக் கட்டிடங்கள் குண்டுகள் வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு இச்சம்பவம் நடைபெற்றது.

இச்சிறைச்சாலையில் இருந்த கைதிகள் பல மாதங்களுக்கு முன்னர் வடபகுதிக்கப்பால் உள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டது தெரிந்ததே.

---

## பிரிவினையை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் மேலும் கூறியதாவது: "தீவிரவாதிகள் பிரிவினைக்குப் பதிலாக அரசியல் தீர்வொன்றுக்கு இணங்க வேண்டும். இராணுவத்தீர்வே பரிகாரம்என அரசாங்கம் நம்பவில்லை. ஆனல் ஆயுத பலத்தால் அரசாங்கத்தை தோற்கடிக்க முடியாதுஎன்பதை தீவிரவாதிகளை உணரச்செய்ய வேண்டும்.''

''அரசியல்தீர்வுநாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பேணுவதோடு, சகல பிரிவினரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் அமைய வேண்டும். தேசியக்கொடியை ஏற்று பௌத்த மதத்துக்கு அளிக்கப்பட்டுள்ள அந்தஸ்தையும் ஏற்க வேண்டும். இவைகளை தீவிரவாதிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏற்கும்வரை ஆயுதப்படைகளின் பலத்தைப் பேணவேண்டியுள்ளது. தீவிரவாதிகளின் முகாம்கள் அழிக்கப்பட வேண்டும்.

''அதே வேளை ஊர்காவல் படை அமைக்கும் திட்டத்தையும் குடியேற்றும் திட்டத்தையும் அரசாங்கம் தொடர்ந்து மேற்கொள்ளும்

''யாழ் இளைஞர்கள் தீவிரவாத இயக்கங்களில் சேர்வதை தடுக்கும் திட்டம் ஒன்றையும் அரசாங்கம் அமுல்படுத்தவுள்ளது. இப்போது இது ஆலோசனை மட்டத்திலேயே உள்ளது. இதன்முழு விபரமும் பின்வெளியிடப்படும்.

உலக அபிப்பிராயம் திரட்டுவதில் முக்கிய கவனம் செலுத்தப்படும் இதற்கு முக்கியமாக இந்தியாவின் ஆதரவு பெறப்படும். தற்போது இந்தியாவுடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன இந்தியாவுடனன உறவுகளில் அபிவிருத்தி காணப்படும்'' என்றும் கூறினர்.

மகாநாட்டில் மேலும் பல சமரச முயற்சிகளை மேலோட்டமாகச் சொன்ன அமைச்சர் அதன் முழுவிபரமும் வெளியிடவில்லை.

---

## நெதர்லாந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருந்த நெதர்லாந்து குழுவினரின் சிபார்சையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாம்.

இலங்கைத் தமிழர்கள்தென்னிலங்கையில் பிரச்னையெதுவுமின்றி அமைதியாக வாழக்கூடிய சூழ்நிலை இருப்பதாக அக்குழு சிபார்சு செய்திருப்பதாக நெதர்லாந்து பிரதமர் திரு. ரூட் லுப்பர்ஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

---

# மரண அறிவித்தல்

## செல்வி சீதாலட்சுமி

யாழ்ப்பாணம் 144, சஸ்துாரியார் வீதியை சேர்ந்த இராமகருஷ்ணனின் அன்பு மகள் சீதாலட்சுமி காலமாகிவிட்டார். அன்னர் தனத்தின் அன்பு மகளும, விஜயராகவன் (R. V. புத்தகசாலை), கவியமூர்த்தி, கருணமூர்த்தி, விஜலட்சுமியின் அன்பு சகோதரியும், வேணுகோபால்[கோசலா புத்தகசாலை], நிர்மலாதேவி, பானுமதியின் மைத்துனியாவார். அன்னரின் இறுதிக் கிரியைகள் 22-5-85, புதன்கிழமை காலை 11 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். உற்ருரும், உறவினரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- S. விஜயராகவன்.
3383

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu P.O. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126